DORE
SAVE A HEART SAVE A LIFE

| | |
|---|---|
| **Placement type** | News Feature | | |
| **Headline** | A new app that gives life-saving tips for Singaporeans | | |
| **Publication** | Tamil Murasu (Print) | | |
| **URL** | N.A. | | |
| **Tone** | Positive | | |
| **Page Number** | 2 | **Date** | 27 May 2018 |

# உயிர் காக்கும் திறனை வளர்க்க புதிய செயலி

மாரடைப்பால் பாதிக்கப்படும் ஒருவரின் உயிரைக் காக்கும் முயற்சியில் சிங்கப்பூரர்களுக்குக் கை கொடுக்க புதிய செயலி ஒன்று அறிமுகம் கண்டுள்ளது.

இதயத் துடிப்பை மீண்டும் செயல்படுக்க வைக்க உதவும் கருவியைக் (ஏஇடி) கொண்டு இதய இயக்க மீட்பு சிகிச்சையை (சிபிஆர்) மேற்கொள்வதற்காக படிப்படியாக விளக்கும் வழிகாட்டுதல்களை 'பேர்' எனும் பெயர் கொண்ட இந்தச் செயலி உள்ளடக்குகிறது. காணொளிகள், புதிர்ப் போட்டிகள், விளையாட்டுகள் வடிவத்தில் இந்த வழிகாட்டுதல்கள் இடம்பெறுகின்றன.

அதோடு, ஒருவருக்கு மாரடைப்பு ஏற்பட்டு அவரது இதயத் துடிப்பு நின்று போகும்போது இந்தச் செயலியின்வழி 995 எனும் எண்ணில் அழைத்து அவசர மருத்துவ உதவி நாடலாம்.

இருக்கும் இடத்தைப் பொறுத்து ஆக அருகில் அமைந்துள்ள 'ஏஇடி' கருவியைக் கண்டுபிடிக்கவும் இந்தச் செயலி உதவும்.

இந்தச் செயலியின் மூலம் பொதுமக்கள் சமூக மையங்களில் நடைபெறும் பயிற்சி வகுப்புகளுக்கு இலவசமாகப் பதிவுசெய்து கொள்ளலாம்.

வகுப்புகளின் நிறைவில் 'சிபிஆர்' சிகிச்சையை மேற்கொள்வதற்கு அவர்களுக்கு சான்றிதழ் அளிக்கப்படும்.

ஒருவரது இதயத் துடிப்பு நின்று போகும்போது அக்கம் பக்கத்தில் உள்ளவர்கள் அவரது உயிரைக் காக்க அவர்களுக்கு அதிகாரம் அளிக்க அரசாங்கம் மேற்கொண்டுவரும் முயற்சிகளில் ஒரு பகுதியாக இந்தச் செயலி அமைகிறது.

பொதுமக்கள் 'ஏஇடி' கருவியைக் கொண்டு 'சிபிஆர்' சிகிச்சையை மேற்கொள்ள உதவ சுகாதார அமைச்சின் மருத்துவ மனையில் சேர்ப்பதற்கு முந்திய அவசரகாலப் பராமரிப்புப் பிரிவு 2014ஆம் ஆண்டில் திட்டம் ஒன்றைத் தொடங்கியது.

தோ பாயோ ஹெச்டிபி ஹப்பில் நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் இந்தச் செயலி அறிமுகம் கண்டது. இதில் உள்துறை, சுகாதார அமைச்சுகளின் மூத்த நாடாளுமன்றச் செயலாளரான திரு அம்ரின் அமின் கலந்து கொண்டார். உயிர்களைக் காப்பதில் சாதாரண சிங்கப்பூரர்களுக்கு இருக்கக்கூடிய பங்கு குறித்து அவர் பேசினார்.

சிங்கப்பூரில் ஒவ்வோர் ஆண்டும் 2,300க்கும் மேற்பட்ட இதயத் துடிப்பு நின்றுபோகும் சம்பவங்கள் நிகழ்வதாக அவர் தெரிவித்தார்.

அவற்றுள் 70 விழுக்காட்டுச் சம்பவங்கள் குடியிருப்புப் பேட்டைகளில் நிகழ்ந்ததாகவும் திரு அமின் சொன்னார்.

DARE
SAVE A HEART SAVE A LIFE

**Translated Text**

**Headline: A new app that gives life-saving tips for Singaporeans**

- The new app under the 'DARE' programme provides educational videos with easy-to-follow CPR instructions and critical information about helping someone who is suffering from a cardiac arrest
- Since 2014, DARE has been holding 45-minute hands-on training sessions in community centres, private and governmental organisations, and schools across Singapore. Participants also learn to dial 995, stay on the line with the 995 specialist so that they are constantly guided with the appropriate instructions, perform CPR as directed, and use an AED
- The DARE app will complement and reinforce what the users have learnt through the training programme
- The launch event in Toa Payoh HDB Hub yesterday was officiated by Mr Amrin Amin, Senior Parliamentary Secretary, Ministry of Home Affairs and Ministry of Health
- In his speech, Mr Amrin said that the Dispatcher-Assisted first Responder programme, or DARE for short, is an important initiative which encourages ordinary Singaporeans to step forward and provide immediate assistance to anyone who has collapsed from cardiac arrest
- He also mentioned that of the more than 2,300 cardiac arrests that occur in Singapore each year, 70% happen in residential areas